# QB365 Question Bank Software Study Material

## புவியியல் - கண்டங்களை ஆராய்தல் (ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா) முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 8ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 55

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) ஆப்ரிக்கா 'தாய் கண்டம்' என அழைக்கப்படுவது ஏன்?

**பதில் :** புவியில் மனித இனங்கள் வாழ்ந்த பழமையான கண்டம் என்பதால் ஆப்பிரிக்காவானது தாய்கண்டம் என புனைப்பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

2) ஆப்ரிக்காவின் முக்கியமான ஆறுகள் யாவை?

**பதில் :** ஆப்பிரிக்காவின் முக்கியமான ஆறுகள்
(i) நைல்நதி
(ii) காங்கேரி
(iii) நைஜர்
(iv) ஜாம்பசி

3) ஆஸ்திரேலியாவின் நிலத்தோற்றப் பிரிவுகள் யாவை?

**பதில் :** ஆஸ்திரேலியாவின் நிலத்தோற்ற பிரிவுகள்
1. மேற்கு ஆஸ்திரேலிய பெரிய பீடபூமி
2. மத்திய தாழ் நிலங்கள்
3. கிழக்கு உயர் நிலங்கள்

4) அண்டார்டிகா கண்டத்தின் தன்மை குறித்து எழுதவும்.

**பதில் :** அண்டார்டிகா ஒரு தனித்துவம் வாய்ந்த கண்டமாகும். ஆனால் இக்கண்டம் பூர்விக மக்களைக் கொண்டிருக்கவில்லை. அண்டார்டிகாவில் எந்த ஒரு நாடும் இல்லை, வெள்ளைக் கண்டம் என அழைக்கப்படும் ஒரே கண்டம் இதுவாகும்.

5) ஆஸ்திரேலியாவின் பொருளாதார நடவடிக்கைகள் ஏதேனும் நான்கினைக் குறிப்பிடுக.

**பதில் :** வேளாண்மை, வளம் சார்ந்த தொழில்கள், மீன்பிடித்தல், உற்பத்தி தொழிலகங்கள், வணிகம் மற்றும் சேவைப் பிரிவு ஆஸ்திரேலியாவின் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளாகும்.

6) ஆப்பிரிக்காவில் காணப்படும் விலங்கினங்களை பட்டியலிடுக.

**பதில் :** (i) வெள்ளை காண்டாமிருகம்
(ii) வெஸ்டர்ன் கிரீன் மாம்பா
(iii) வரிக்குதிரை
(iv) ஆப்பிரிக்க யானை
(v) மனித குரங்கு
(vi) காட்டெருமை
(vii) நீர் யானை
(viii) போன போ (குரங்கு வகை)
(ix) காட்டு நாய்
(x) கழுதை புலி
(xi) லெமூர் (நரி போன்ற முகம்)

7) "ஹார்மாட்டான்" மற்றும்" சிராக்கோ" குறிப்பு வரைக.

**பதில் :** **ஹார்மாட்டான்:**
சகாரா பாலைவனத்தில் இருந்து கினியா கடற்கரையை நோக்கி வீசும் வறண்ட வெப்பப் புழுதி தலக்காற்று "ஹார்மாட்டான்" என்று அழைக்கப்படுகிறது.
**சிராக்கோ:**

சகாரா பாலைவனத்திலிருந்து மத்தியதரைக்கடல் நோக்கி வீசும் வெப்ப தலக்காற்று "சிராக்கோ" என்று அழைக்கப்படுகிறது.

8) ஆஸ்திரேலியாவின் அரசியல் பிரிவுகள் யாவை?

**பதில் :** ஆஸ்திரேலியா 6 மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களைக் கொண்டுள்ளது.
**மாநிலங்கள்:**
(i) நியூ சவுத்வேல்ஸ்
(ii) குயின்ஸ்லாந்து
(iii) தெற்கு ஆஸ்திரேலியா
(iv) டாஸ்மேனியா
(v) விக்டோரியா
(vi) மேற்கு ஆஸ்திரேலியா
**யூனியன் பிரதேசங்கள்:**
(i) வடக்கு யூனியன் பிரதேசம்
(ii) ஆஸ்திரேலிய தலைநகர் பகுதி (கான்பெரா)

9) அண்டார்டிகாவிலுள்ள இந்திய அறிவியல் ஆராய்ச்சி நிலையங்கள் யாவை?

**பதில் :** (i) பாரதி
(ii) மைத்ரேயி
(iii) பாரதி

10) மேக்ரெப் என்றால் என்ன?

**பதில் :** 1. வட மேற்கு ஆப்பிரிக்க நாடுகளான மொராக்கோ, அல்ஜீரியா, லிபியா, மோரிடானியா மற்றும் துனிசியா ஆகிய நாடுகளின் குழு மேக்ரெப் (Maghreb) என்று அழைக்கப்படுகிறது.
2. அரபு மொழியில் இதன் பொருள் மேற்கு என்பதாகும்.

11) சவானா புல்வெளிகள் ஆப்பிரிக்காவில் எங்கு காணப்படுகின்றன?

**பதில் :** 1. சவானா புல்வெளிகள் ஆப்பிரிக்காவின் பாதிக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் காணப்படுகிறது.
2. இப்புல்வெளி நிலநடுக்கோட்டிற்கு அருகில் அமைந்துள்ள மலைக்காடுகளுக்கு வடக்கு மற்றும் தெற்கு என இரு பகுதிகளிலும் காணப்படுகின்றன.

12) ஆப்பிரிக்க ஆறுகளின் தந்தை என்று எந்த நதி அழைக்கப்படுகிறது? ஏன்?

**பதில் :** 1. நைல் நதி ஆப்பிரிக்க ஆறுகளின் தந்தை என அழைக்கப்படுகிறது.
2. இந்நதி 6650 கி.மீ. நீளம் கொண்ட உலகின் மிக நீளமான நதி ஆகும்.
3. வெள்ளை நைல் மற்றும் நீல நைல், நைல் நதியின் துணை ஆறுகள் ஆகும். இது வடக்கு நோக்கி பாய்ந்து மத்திய தரைக்கடலில் கலக்கிறது.

13) ஆப்பிரிக்காவின் முக்கிய பழங்குடி இனங்கள் யாவை?

**பதில் :** அபர், பாட்வா, புஷ்மன், டிங்கா, மசாய், பிக்மீஸ், ஜுலு, சுவான் மற்றும் எஃபி ஆகியோர் ஆப்பிரிக்காவின் முக்கிய பழங்குடி இனங்களாகும்.

14) ஆஸ்திரேலியாவில் உள்ள பல்வேறு வனவிலங்குகள் பற்றி எழுதுக.

**பதில் :** ஆஸ்திரேலியாவில் சுமார் 400 வகை பாலூட்டி இனங்களும் சுமார் 140 வகையான வயிற்றீல் பையுடைய பாலூட்டி இனங்களும் உள்ளன. இவ்வகையான விலங்கினங்கள் தங்களுடைய குட்டிகளைத் தங்கள் வயிற்றில் உள்ள பைகளில் சுமந்து செல்கின்றன. கங்காரு ஆஸ்திரேலியாவின் தேசிய விலங்காகும். கோலா, பிலேட்டிபஸ், வாலபி மற்றும் டிங்கோ ஆஸ்திரேலியாவின் பிற முக்கிய விலங்கினங்களாகும். சிரிக்கும் கூக்காபரா, ஈமு, ரெயின்போ லோரிகிட் ஆகியவை ஆஸ்திரேலியாவின் முக்கிய பறவை இனங்களாகும்.

15) ஆஸ்திரேலியாவின் மெரினோ வகை செம்மறி ஆடுகள் பற்றி எழுதுக.

**பதில் :** 1. வெப்ப மண்டல சவானா புல்வெளிகளில் கால்நடை வளர்ப்பும், மிதவெப்ப மண்டல புல்வெளிகளில் ஆடுகள் வளர்ப்பும் மிகுதியாகக் காணப்படுகின்றன.
2. மெரினோ வகை செம்மறி ஆடுகள் தெற்கு ஆஸ்திரேலியா, டாஸ்மேனியா, விக்டோரியா மற்றும் நியூ சவுத்வேல்ஸ் ஆகிய பகுதிகளில் வளர்க்கப்படுகின்றன.

**5 மதிப்பெண் வினாக்கள்** 5 x 5 = 25

16) ஆஸ்திரேலியாவின் கனிம வளங்கள் குறித்து விரிவாக எழுதவும்.

**பதில் : கனிம வளங்கள்:**

1. கனிமங்கள் ஆஸ்திரேலியாவின் மிக முக்கிய ஏற்றுமதிப் பெருட்களாகும்.
2. இவை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 10 சதவீத பங்களிப்பை அளிக்கின்றன.
3. பாக்சைட், லைமோனைட், ரூட்டில் மற்றும் சிர்கான் உற்பத்தியில் ஆஸ்திரேலியா உலகின் முன்னணி உற்பத்தியாளராகவும், தங்கம், ஈயம், லத்தியம், மாங்கனீசு, தாது மற்றும் துத்தநாகம் உற்பத்தியில் இரண்டாவது முன்னணி உற்பத்தியாளராகவும். இரும்புத்தாது மற்றும் யுரேனியம் உற்பத்தியில் மூன்றாவது பெரிய உற்பத்தியாளராகவும். நிலக்கரி உற்பத்தியில் நான்காவது பெரிய உற்பத்தியாளராகவும் இந்நாடு திகழ்கிறது.
4. மேற்கு மற்றும் தெற்கு ஆஸ்திரேலியா பகுதிகளில் நிலக்கரி வயல்கள் தென்கிழக்கு கடற்கரை பிரதேசங்களில் நியூகேஸ்டல் முதல் சிட்னி வரை நீண்டு காணப்படுகிறது.
5. இரும்புத்தாது மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தெற்கு ஆஸ்திரேலியாவில் காணப்படுகிறது.
6. பாக்சைட் தாதுவானது கார்ப்பென்டீரியா வளைகுடா, பெர்த் மற்றும் டாஸ்மேனியாவை சுற்றியுள்ள பகுதிகளில் வெட்டி எடுக்கப்படுகிறது.
7. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு பாஸ் நீர்சந்தி மற்றும் மேற்கு பிரிஸ்பேன் பகுதிகளில் கிடைக்கிறது. யுரேனியம் தாது வட யூனியன் பிரதேசத்தில் உள்ள ராம் காடுகள் மற்றும் குயின்ஸ்லாந்து பகுதிகளில் இருந்து பெறப்படுகிறது.
8. மேற்கு பாலைவனப் பகுதியில் கால் கூர்லி மற்றும் கூல்கார்லி பகுதிகளில் தங்கம் வெட்டியெடுக்கப்படுகின்றன. காரியம், துத்தநாகம், வெள்ளி, டங்ஸ்டன், நிக்கல் மற்றும் செம்பு போன்றவை ஆஸ்திரேலியாவின் சில பகுதிகளிலிருந்து பெறப்படுகின்றன.

17) அண்டார்டிகா கண்டத்தின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பற்றி விவரி.

**பதில் : தாவரங்கள் மற்றும் விலங்குகள்:**

1. இக்கண்டத்தில் வெப்பநிலையானது ஆண்டு முழுவதும் உறை நிலைக்கு கீழே இருப்பதால் பெரிய தாவரங்கள் எதுவும் காணப்படவில்லை.
2. சிறிய வகை தாவரங்களான பாசிகள், படர் பாசிச்செடிகள், நுரைப் பாசிகள், மரப் பாசிகள், நுண்ணிய பூஞ்சைகள் போன்றவைகள் பனியை தாங்கி வளர்கின்றன.
3. சில பாசி வகைகள் பனிகளற்ற கடலோர பாறை நிலங்களில் காணப்படுகின்றன.
4. பிளாங்டன், பாசிகள் மற்றும் மரப்பாசிகள் அண்டார்டிகாவில் உள்ள நன்னீர் மற்றும் உவர் நீர் ஏரிகளில் காணப்படுகின்றன.
5. சிறியவகை செம்மீன்களான கிரில்கள் பெரிய திரள்களாகக் காணப்படுகின்றன.
6. இவை கடல்வாழ் உயிரினங்களுக்கு உணவாகப் பயன்படுகின்றன.
7. நீலத் திமிங்கலம், கடற்பசு போன்ற கடல் விலங்கினங்கள், கடல் பறவைகளான பென்குவின், அல்பட்ராஸ், போலார் ஸ்குவா மற்றும் ஸ்டவுட் ஆகியன இங்கு காணப்படுகின்றது.
8. மிகப்பெரிய கடல்வாழ் உயிரினமான நீலத்திமிங்கலம் பிளாங்டன்களை உணவாக உட்கொள்கிறது. இங்குள்ள அனைத்து விலங்குகள் மற்றும் பறவைகளும் குளிர்கால நிலையை எதிர்கொள்ள தங்கள் உடலில் புளுபர் எனப்படும் அடர்த்தியான கொழுப்பு அடுக்கினை கொண்டுள்ளன. பென்குயின் பறவைகளால் பறக்க இயலாது.
9. இவைகளுக்கு இறக்கைகளுக்கு பதிலாக நீந்துவதற்குப் பயன்படும் பிலிப்பர் மற்றும் தோலிலைப் பொதியுடைய அகலமான பாதங்களைக் கொண்டுள்ளன.
10. சிறிய முதுகெலும்பற்ற உயிரினங்கள் இக்கண்டத்தின் நிலவாழ் விலங்கினங்களாகும்.

18) ஆப்ரிக்காவின் இயற்கைப் பிரிவுகளை எழுதி அவற்றில் ஏதேனும் ஒன்றினை விளக்கவும்.

**பதில் :** ஆப்பிரிக்காவின் இயற்கைப் பிரிவுகள்:

**1. ஆப்பிரிக்காவின் இயற்கை அமைப்பை 8 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.**

i. சகாரா (Sahara)

ii. சாஹேல் (Sahel)

iii. சவானா (Savanna)

iv. பெரிய பிளவு பள்ளத்தாக்கு மற்றும் ஆப்பிரிக்காவின் பெரிய ஏரிகள் (Great Rift Valley and Great Lakes of Arfica)

v. கிழக்கு ஆப்பிரிக்க உயர் நிலங்கள் (East African Highlands)

vi. சுவாலி கடற்கரை (Swahili Coast)

vii. காங்கோ வடிநிலம் / ஜையர் வடிநிலம் (Gango Basin / Zaire Africa)

viii. தென் ஆப்பிரிக்கா (Southern Africa)

**2. தென் ஆப்பிரிக்கா**

i. தென் ஆப்பிரிக்காவின் பெரும்பகுதி பீடபூமிகளால் ஆனது.

ii. ட்ராகன்ஸ் பெர்க் மலைத்தொடரானது வன்சரிவுடைய கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது.

iii. இது வடகிழக்கிலிருந்து தென்மேற்காக 1125 கிலோ மீட்டர் நீண்டுள்ளது.

iv. இதன் உயர்ந்த சிகரம் தபனாநிட் லியானா (3482 மீட்டர்) ஆகும்.

V. இந்தப் பகுதி 'வெல்டு' எனப்படும் புல்வெளிகளால் சூழப்பட்டுள்ளது.

vi. கலகாரி பாலைவனம் தென் ஆப்பிரிக்காவின் தென் பகுதியிலும் நமீப்பாலைவனம் ஆப்பிரிக்காவின் தென்மேற்கு கடற்கரைப் பகுதியிலும் அமைந்துள்ளன.

vii. இப்பிரதேசத்தில் காணப்படும் கலகாரி பாலைவனம் உண்மையில் ஒரு பாலைவனம் அல்ல மாறாக ஆரஞ்சு மற்றும் ஜாம்பசி நதிகளுக்கு இடையே அமைந்துள்ள ஒரு வறண்ட முட்புதர் நிலமாகும்.

19) அரோரா (விண்ணொளி) பற்றி விவரி.

**பதில் :** (i) வட மற்றும் தென் காந்தத் துருவங்களுக்கு அருகில் இயற்கையில் தோன்றும் பிரகாசமான இளஞ்சிவப்பு, சிவப்பு நிற மற்றும் பச்சை நிற ஒளியின் கலவை அரோரா என்று அழைக்கப்படுகிறது.

(ii) இவ்விளைவானது சூரியனிலிருந்து வரும் மின்னூட்ட துகள்கள் வளிமண்டல மேலடுக்கிலுள்ள அணுக்களுடன் வினைபுரிவதால் உண்டாகிறது.

(iii) இது தென் துருவத்தில் அரோரா, ஆஸ்ட்ராலிஸ் அல்லது தென்துருவ ஜோதி எனவும் வட துருவத்தில் அரோரா பொரியாலிஸ் அல்லது வடதுருவ ஜோதி எனவும் அழைக்கப்படுகிறது.

(iv) இவ்வாறான வண்ண ஒளிக்கீற்றுகளை குறிப்பாக உயர் அட்சங்களில் அமைந்துள்ள நாடுகளான வடக்கிலுள்ள அலாஸ்கா மற்றும் தென் துருவத்தில் அமைந்துள்ள நியூசிலாந்தின் பாக்லாந்து தீவுப்பகுதிகளில் காணலாம்.

20) விரிவாக விவரிக்கவும்.

அ) பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதி

ஆ) பெரிய பவளத்திட்டு தொடர்

**பதில் :** **அ) பெரிய ஆர்ட்டீசியன் வடிநிலப்பகுதி (Great Artesian Basin) :**

i. புவியினுள் இருந்து வேகமாக வெளியேறும் நீரூற்றுகள் ஆர்ட்டீசியன் நீரூற்றுகள் எனப்படுகின்றன, இவ்வகை நீருற்றுகளைக் கொண்ட புவிப்பகுதி ஆர்ட்டீசியன் வடிநிலம் ஆகும்.

ii. ஆஸ்திரேலியாவில் உள்ள பெரிய ஆர்ட்டீசியன் படுகை உலகின் மிகப்பெரிய மற்றும் ஆழமான படுகையாகும்.

iii. பெரிய ஆர்டீசியன் வடிநிலப்பகுதி, பெரும்பிரிப்பு மலைத்தொடருக்கு மேற்கே அமைந்துள்ளது.

iv. இது குயின்ஸ்லாந்தின் சில பகுதிகள் மற்றும் நியூ சவுத்வேல்ஸ், தெற்கு ஆஸ்திரேலியா மற்றும் வடக்கு யூனியன் பிரதேசத்தின் வறண்ட மற்றும் அரை வறண்ட பகுதிகளில் காணப்படுகிறது.

V. இது 1.7 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பில் அமைந்துள்ளது.

vi. இது இப்பிரதேசத்தின் முக்கிய நீர் ஆதாரமாக உள்ளது.

**ஆ) பெரிய பவளத்திட்டு தொடர் (The Great Barrier Reef):**

i. ஆஸ்திரேலியாவின் பெரிய பவளத்திட்டு தொடர் பசிபிக் பெருங்கடல் பகுதியில் குயின்ஸ்லாந்தின் கிழக்கு கடற்கரையை ஒட்டிய வடகிழக்கு பகுதியில் காணப்படுகிறது.

ii. இது சிறிய பவள நுண்ணுயிர்களால் உருவானது.

iii. இது சுமார் 2300 கிலோமீட்டர் நீளம் கொண்டது.

iv. இது உலகின் இயற்கை அதிசயங்களில் ஒன்றாகும்.